# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 28.06.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டநடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024-ம் மாத ங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்./1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.828**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024-ம் மாத ங்களுக்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.829**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024-ம் மாத ங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண். 1015 /2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.830**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண். 1015 /2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.831**

5. இந்நகராட்சி உதவி வருவாய் அலுவலர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2024-ம் மாத ங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.832**

6. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் அறிவுசார் மையம் கட்டும் பணிக்கு மதிப்பு ரூ.112.00 இலட்சம், மற்றும் தூய்மை பாரத திட்டம் 2.0 (2022-2023 இன் கீழ் கரட்டூர் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பயோ மைனிங் முறையில் அப்புறப்படுத்துதல் பணிக்கு மதிப்பு ரூ .48.00 இலட்சம் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை (ஒப்பந்தப்புள்ளி கோரும் நாள் 12.02.2024) ல் செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்கான செலவின தொகை ரூ.57,383/-க்கு Flame Advertising Company Private Ltd அவர்களிடமிருந்து பில் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

செலவினத்தொகை ரூ 57,383./னை Flame Advertising Company Private Ltd அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண் 897/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2.மேற்கான செலவின தொகை ரூ.57,383/-னை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 833**

7. நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் இந்நகராட்சியில், மேற்கொள்ளப்பட்ட எரிவாயு தகன மேடை வளாக கட்டிடத்தில், நவீன வசதிகளுடன் LPG மயானம் புனரமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 16.11.2023 –

ல் கோரப்பட்டமைக்கான செலவு தொகை ரூ.19,635/- னை வழங்க கோரி Flame Advertising Company Pvt அவர்களிடமிருந்து பில் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

ரூ.19,635/-னை Flame Advertising Company Pvt அவர்களுக்கு வழங்கிடவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 3297/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.834**

8. அரசு (MS) ஆணை எண் 69, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி [UD4(1)] துறை நாள் 11.03.2024 இல் கட்டிட அனுமதி வழங்கப்படும் இனங்களில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 12மீ முதல் 18.30 வரை உயரம் இருந்ததை மாற்றம் செய்து தற்போது 14மீ முதல் 18.30வரை உயரத்திற்கு (NON HIGH RISH BULIDING) தற்போது கட்டிடம் கட்டிக்கொள்ள கட்டிட அனுமதி வழங்கலாம் என உத்திரவிடப்பட்டு தமிழ்நாடு மாநில அரசிதழ் எண் 100 நாள் 11.03.2024 இல் வெளியிடப்பட்டு அதன் நகலுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண் 27611/2023/TCP-5 நாள் 15.03.2024 ஆம் நாளிட்ட கடிதத்தில் வரப்பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.548/2024/எப்1

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.835**

9. இந்நகராட்சியில் நூலக நிதி 2023-2024 கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு 15.03.2024 ஆம் தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது (ந.க.எண்.334/2024/இ1)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட தெற்கு பார்க் வீதியில் உள்ள அரசு பொது நூலகத்தில் இரண்டாம் தளம் கட்டும் பணி | 22,00,000 | M/s. KNM Project ஒப்பந்ததரார் | -0.07 சதவீதம் மதிப்பிட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. Logu Construction ஒப்பந்ததரார் | 0.08 சதவீதம் மதிப்பிட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

நிபந்தனைகள்

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 க்கு குறைந்த ஒப்பந்த புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s KNM Project அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணி திட்டப்பணி என்பதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :1 அனுமதிக்கப்பட்டது ,2 மற்றும் 3 ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.836**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நடப்பாண்டிற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட உத்தேச செலவினங்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளில் உள்ள சொத்து வரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில்வரி, செலுத்த பொதுமக்களுக்கு கேட்பு அறிவிப்புகள் முதல் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டுக்கு கணினியில் இருந்து பிரிண்டிங் எடுக்கும் பணிக்கு உத்தேச செலவினம். | ரூ.50,000/- |
| 2 | இந்நகராட்சி 2023-2024 ஆம் ஆண்டிற்கான சொத்து வரி, காலியிட வரி, மற்றும் தொழில்வரி ஆகிய இனங்களுக்கு நிலுவை மற்றும் நடப்பாண்டுக்கான கேட்பு வசூல் நிலுவை (DCB) பதிவேடுகள் அலுவலக கணினியில் இருந்து பிரிண்டிங் எடுக்கும் பணி மற்றும் தனித்தனியாக வார்டு வாரியாக பைண்டிங் செய்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம். | ரூ.20,000/- |
| 3 | வருவாய் உதவியாளர்கள் வார்டுகளில் வசூல் செய்ய கையேடு ( Hand Book ) மற்றும் நிலுவை பதிவேடு கணினியிலிருந்து பிரிண்டிங் செய்து பைண்டிங் செய்ய ஆகும் உத்தேச செலவினம். | ரூ.15,000/- |
| | மொத்தம் | **ரூ.85,000/-** |

மேற்கண்ட வரி இனங்களுக்கு 2024-2025 ஆம் நடப்பாண்டிற்க்கு ஆகும் செலவுத்தொகைகளுக்கு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்க்கு பணியினை மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.921/2023/அ1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.837**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Puzhuthivakkam, Chennai – 600 091 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 14.05.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 15.05.2024

முதல் 30.06.2024 முடிய 46 வேலை நாட்களுக்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/- என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 9.71 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1829/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர்களின் முன் அனுமதி பெற்று 12.02.2024 ம் தேதி முதல் நோய் தடுப்பு பணிகளை மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது**

**3 ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.838**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கொசுவினால் பரவும் டெங்கு உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்களை அழிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் Temephos Emulsifiable 50% EC மற்றும் Pyrethrum 2% Extract போன்ற மருந்துகள் முன்னதாகவே கொள்முதல் செய்து இருப்பு வைத்து நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்த வேண்டி உள்ளது. எனவே அரசு கூட்டுறவு நிறுவனமான M/s.Tamil Nadu Multipurpose Indico Serve, Thiruchirappali – 620008 அவர்களிடம் Temephos Emulsifiable EC மருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.693.50 + 18% GST மற்றும் Pyrethrum2% Extract மருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.1008 + 18% GST என்னும் விலைவிகிதத்தில் நேரிடையாக கொள்முதல் செய்து கொள்ளவும் இம்மருந்தினை தேவைக்கேற்ப ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 959/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.839**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 AA 8939 இன் தகுதி காலம் 27.03.2024 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 13.03.2024 இல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்,<br>கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு,<br>கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில்,<br>ஆர்.என்.புதூர்,<br>ஈரோடு – 638 005. | ரூ. 71,250/-<br>(18 % GST Extra) |

| | | |
|---|---|---|
| 2. | ஓம். முருகா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>66/8, காளியன்னன் வீதி,<br>சம்பத் நகர், உழவர் சந்தை அருகில்,<br>ஈரோடு – 638 011. | ரூ. 72,350 /–<br>(18 % GST Extra) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் ரூ.71,250/– அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள M/s. காந்தி மோட்டார்ஸ், கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.301/2024/எச்1

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டு தகுதிசான்று புதுப்பித்ததை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது**

**2 ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.840**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 36 AA 4564 இன் தகுதி காலம் 11.03.2024 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 13.03.2024 இல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காந்தி மோட்டார்ஸ்,<br>கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு,<br>கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில்,<br>ஆர்.என்.புதூர்,<br>ஈரோடு – 638 005. | ரூ. 99,150/–<br>(18 % GST Extra) |
| 2. | ஓம். முருகா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>66/8, காளியன்னன் வீதி,<br>சம்பத் நகர், உழவர் சந்தை அருகில்,<br>ஈரோடு – 638 011. | ரூ. 1,07,200 /–<br>(18 % GST Extra) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் ரூ.99,150/– அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள M/s. காந்தி மோட்டார்ஸ், கே.கே. கார்டன், சி.எம்.நகர் ரோடு, கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி அருகில், ஆர்.என்.புதூர், ஈரோடு – 638 005 என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.களண்.300/2024/எச்1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பித்ததை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 3அனுமதிக்கப்பட்டது**

**2 ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.841**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் பகுதிகளில் சேகரிக்கப்படும் துகள்களாக்கும் பல்வரைசர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டு இயங்கி வரும் Conveyer Belt பழுதடைந்து உள்ளதால், பழுதான Conveyer Belt ஐ எடுத்து விட்டு 2X4 SIZE பிட் மூன்று இடங்களில் பொருத்தி சரிசெய்து இயந்திரத்தினை தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது.

எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியில் நிபுணத்துவம் வாய்ந்த M/S. Eco Enviro Solutions, Erode அவர்களிடம் சரிசெய்து கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.15,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.778/2024/எச்1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.842**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் பொதுசுகாதாரபிரிவின் மூலம் நகரில் மேற்கொள்ளப் பட்டு வரும் சுகாதாரப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் கிருமி நாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்புத் தூள், பிளீச்சிங் பவுடர், கருப்பு பினாயில், கழிவறைகளை சுத்தம் செய்யும் ஆசிட் போன்றவற்றை அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil Nadu Multipurpose Indico Serve, Thiruchirappali – 620008 நிறுவனத்தின் விலை விகிதத்தில் நேரிடையாக தேவைகேற்ப ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.958/2024/எச்1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.843**

17. இந்நகராட்சியின் உயிரி எரிவாயு கூடத்தின் (Bio – Gas Plant) Gas சேமிக்கும் பலூனிற்கு Gas செல்லும் வால்வு துரு பிடித்தும் பலூனில் துவாரம் ஏற்பட்டும் உள்ளதை M/s. Eco Environs Solutions, Palayapalayam, Erode அவர்களிடம் சரி செய்த வகையில் ரூ.4970/– ஐ துப்புரவு ஆய்வாளர் திரு. B.K.சௌந்தரராஜன் அவர்களால் செலவிடப்பட்டது. அத்தொகையினை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 724/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம்

அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது நகர் மன்றத்தீர்மான எண்.844**

18. இந்நகராட்சியின் திடக்கழிவு பிளாஸ்டிக் மேலாண்மை செயலாக்க மையங்களான MCC-I, II, III, RRC -ல் உள்ள பேலிங் இயந்திரங்கள், உயிரி எரிவாயு கூடம் (Bio Methanation Plant) மற்றும் எரியூட்டும் கலன் இன்சினரேட்டர் போன்றவற்றில் உள்ள இயந்திரங்களில் அவ்வப்போது பழுது ஏற்படுவதைத் தவிர்த்து பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெற ஏதுவாக அவ்வினங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் (Annual Maintanence) மேற்கொள்ளும் பணிக்கு 22.02.2024 அன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (மூன்று மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | The Explosive Enter Prices,<br>Kamban School,<br>21 PMK Rice Mill Street,<br>Gobichettipalayam | ரூ.32,000/-<br>+<br>Spar parts rate and GST will be Extra |
| 2. | சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>முத்து வேலப்ப கவுண்டர் வீதி,<br>கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், (அருகில்)<br>புதுப்பாளையம் | ரூ.30000 /-<br>+<br>Spar parts rate and GST will be Extra |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ், முத்து வேலப்ப கவுண்டர் வீதி, கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், (அருகில்) புதுப்பாளையம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.2768/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு . அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.845**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் தினமும் சேகரமாகும் நாப்கின்கள்,பேடுகள், மற்றும் டயாபர்கள் உள்ளிட்ட எரியும் தன்மையுடைய அபாயகரமான கழிவுகள் ராமர் எக்ஸ்டென்சனில் நிறுவப்பட்டுள்ள எரியூட்டும் இயந்திரத்தில் (Incinerator) இறுதியாக்கம் செய்யப்படுகிறது. இந்த எரியூட்டும் இயந்திரத்தில் (Incinerator) தண்ணீர் தெளிக்கும் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பினை எரியூட்டும் இயந்திரம் விநியோகம் செய்த நிறுவனமான M/s. Steel Tech Cort Solution Pvt Ltd, Malappuram, Kerala – 673 634 அவர்களிடம் சரிசெய்த வகையில் வழங்க வேண்டிய தொகை ரூ.4130/-ற்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 926/2024/எச் 1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.846**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொதுசுகாதார பிரிவின் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய பசுமைவரி, சாலை வரி, தொகை ரூ.50687/–ஐ வட்டாரப்போக்குவரத்து அலுவலகம் கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு செலுத்தப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 596/2024/எச் 1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.847**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குப்பட்ட லக்கம்பட்டி கிராமம் வார்டு–B, பிளாக் – 1, நகரளவை எண்.7ல் 0.79 ½ ஏக்கர் பரப்பில் அமையும் காலியிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவாக அமைக்க 19.01.2022 ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு திரு.கே.எஸ்.ஜெகதீசன் அவர்களால் விண்ணப்பிக்கப்பட்டது . இதனையடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.203/2022 ஈமா/2, நாள்.18.04.2022 இல் சாலை வரைபடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மனுதாரரால் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகர்மன்ற தீர்மான எண் 221, நாள்.30.08.2022ல் நகராட்சிக்கு தானக்கிரயமாக பெற்றுக்கொள்வதற்கு மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சிக்கு ஆவண எண்.556, நாள்.15.02.2023 மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆவண எண்.557, நாள்.15.02.2023, ஆகிய தேதிகளில் மனுதாரரால் நகராட்சிக்கு தானக்கிரையமாக ஒப்படைப்பு செய்யப்பட்டு ஆணையாளர் பெயரில் உட்பிரிவு செய்து அசல் ஆவணங்களை நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் இணையவழி மனைப்பிரிவு திட்ட அனுமதி ந.க.எண் 1E74FDJ4/2022/TCP, நாள்.17.05.2023 ல் மனைப்பிரிவு வரைபட அனுமதி எண் .SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.206/2023 என எண்ணிடப்பட்டு மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி இடத்தினை பொறியியர் பிரிவினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு 21.09.2022 இல் சான்றளிக்கப்பட்டுள்ளது.

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு மேல்குறிப்பிட்டுள்ள இடத்தில் சாலைகள் மற்றும் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி மனைப்பிரிவில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பகுதிக்கு ஏற்கனவே உள்ள விநியோக குழாய்கள் இணைப்பு மற்றும் உள்இணைப்பு செய்ய அப்பகுதி குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு அதன் பின்பு தான் இணைப்புகள் வழங்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி மனைப்பிரிவில் தெருவிளக்கு மற்றும் மின்கம்பங்கள் அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மனுதாரரால் ரூபாய், 1,22,230/– யை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு நாள்.10.03.2023 அன்று இணையவழியாக செலுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னர் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுவிட்டது.

மேற்படி மனைப்பிரிவில் பொதுஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் கம்பிவேலி அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர் பலகை வைக்கப்பட்டு அதன் புகைப்பட நகல் மனுதரரால் சமர்பிக்கப்பட்டது. மேலும் மனுதரார் மேற்படி மனைப்பிரிவில் பிரிக்கப்பட்ட மனையிடங்கள் அனைத்திற்கும் தனித்தனியாக உட்பிரிவு செய்து, (உட்பிரிவு எண்கள் 7/1, 7/2, 7/5, 7/6, 7/7, 7/8, 7/9, 7/10, 7/11, 7/12, 7/13, 7/14, 7/15, 7/16, 7/17, 7/18, 7/19, 7/20,) வட்டாசியர் அவர்களால் உத்தரவிடப்பட்டு

அதன் நகல்கள் சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் கீழ்கண்டவாறு மனுதரரால் செலுத்தப்பட்டுள்ளது.

1. மனைப்பிரிவு கட்டணம் ரூ,30,000/- அபிவிருத்தி கட்டணம், ரூபாய் ,6500/- நாள்.07.07.2022,
2. மனைப்பிரிவு வைப்புத்தொகை ரூபாய் 79,500/- நாள். 12.12.2022,
3. நில உபயோக மாற்றுக் கட்டணம் ரூபாய் 25,000/- கூராய்வு கட்டணம் ரூபாய், 16,000/- நாள்.30.05.2024

எனவே மேற்காணும் விபரங்களின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின் பேரிலும் லக்கம்பட்டி கிராமம், வார்டு B, பிளாக் 1, நகரளைவை எண் 7ல் அமையும் 0.79 ½ ஏக்கர் காலியிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.206/2023 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் கீழ்காணும் விபரப்படியான சிறப்பு நிபந்தனைக்கு உட்பட்டும் இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

இம்மனைப்பிரிவில் வடிகால் கழிவு நீர் செல்வது தொடர்பாக பொதுபிரச்சனை ஏற்படும் போது மனைப்பிரிவு உரிமையாளரே தமது சொந்த பொறுப்பில் தீர்வு செய்து கொள்ள வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. (ந.க.எண். 1088/2022/எப்1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.848**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் 2023-2024-ம் நிதியாண்டிற்கான பொதுநிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி வாரியாக தணிக்கைக்கு கணக்குகள் தயார் செய்து கொடுக்கும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2273/2020/B1)

| வ எண் | விலைப்புள்ளி விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | A.யமுனா தேவி<br>E, 194, கூட்டப்பள்ளி காலனி<br>திருச்செங்கோடு | ரூ 95,000/- |
| 2. | B. சுபத்ரா<br>த/பெ. பாலசுப்ரமணியம்<br>தேவனாங்குறிச்சி<br>திருச்செங்கோடு. | ரூ 85,000/- |
| 3. | A. வைரவேல் B.com<br>(Accountant Retired)<br>E. 189 கூட்டப்பள்ளி காலனி<br>திருச்செங்கோடு | ரூ. 75,000/- |

**அலுவலக குறிப்பு :–**

பெறப்பட்ட விலைபுள்ளிகளில் குறைந்த விலைப் புள்ளி வழங்கிய வரிசை எண் 3ல் காணும் A.வைரவேல் B.com திருச்செங்கோடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.849**

23. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற வணிக நோக்கங்களுக்காக 2024–2025 ஆம் ஆண்டு முதல் தொழில் உரிமக் கட்டணங்கள் திருத்தி நிர்ணயம் செய்து வசூலித்து உரிமம் வழங்கிட நகர்மன்ற தீர்மானம் எண். 728 நாள்.29.12.2023 –ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. திருத்திய உரிம விபரக் கட்டண விபரங்களை பிரசுரம் செய்ய பிரசுரக் கட்டணம் பக்கம் ஒன்றிற்கு ரூ.3000/–வீதம் 14 பக்கங்களுக்கு ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிட ரூ.42000/–ம் தொகையினை அரசு கிளை அச்சகம், சேலம் அவர்களின் அரசு கணக்கில் செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.( ந.க.எண்.2812/2023/எச்1

**அலுவலகக் குறிப்பு** : தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி விதி 235 (3) அட்டவணை II ல் (h)ன் கீழ் பொது நிதியிலிருந்து தொகைசெலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : ஏற்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.850**

24. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையத்தில் சேமித்து வைத்து கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி திடக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு ஒப்பந்ததாரரான M/S. Explosive Enter Prises, Gobichettipalayam அவர்களிடமிருந்து ரூ.1680/– என்னும் விலை விகிதத்தில் (ஒரு டன் பிளாஸ்டிக்களை அனுப்பிட) சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை பெற்று சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி அப்புறப்படுத்திட நகர்மன்ற தீர்மான எண்.729 நாள்.29.12.2023 ன் படி செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டு 29.04.2024 தேதி வரை ரூ.2.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 18.05.2024 ஆம் தேதியன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் இந்நகராட்சியினை ஆய்வு செய்து சேமித்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பிளாஸ்டிக் கழிவுகளையும் ஒரு வார காலத்திற்குள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தியத்திற்கிணங்க 30.04.2024 ஆம் தேதி முதல் 130.56 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிக்கு எதிர் வரும் 31.07.2024 ஆம் தேதி வரையிலும் இப்பணியை மேற்கொள்ளுவதற்கும் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2861/2023/எச்1)

**அலுவலக குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதார பிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி வசூலிக்கப்படும் அபராத கட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவு பயணீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge) செலவு செய்து கொள்ளவும், அத்தொகையில் இருப்பு இல்லாத நேர்வில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.851**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் தினமும் சேகரமாகும் உணவு, பழம் மற்றும் மாமிசக் கழிவுகளை அரைத்து உயிரி எரிவாயு உற்பத்தி செய்யும் உயிரி எரிவாயு கலனில் உணவு பழங்கள் மற்றும் மாமிசக் கழிவுகளை அரைக்கும் Shreading Machine–ன் பிளேடுகள் மிகவும் தேய்ந்துள்ளதை சரிசெய்து கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.8000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 926/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1.மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.852**

26. 15வது நிதிக்குழு மானியம் 2023–2024 மற்றும் 2024–2025 (United Grant)ன் சாலைபணிகள் மேற்கொள்ளும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 24.02.2024 ல் கோரப்பட்டமைக்கான செலவு தொகை Ravi Publicity Service Rs.26040.00 வழங்க கோரி 26.02.2024 ல் பில் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

எனவே செலவு தொகை Ravi Publicity Service Rs.26040.00 வழங்கிடவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.204/2024/இ1)

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.853**

27. இந்நகராட்சியில் பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024 கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு 12.06.2024 ஆம் தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு' தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைபள்ளியில் கழிப்பிடம் கட்டுவதற்கான பணி | 7,50,000 | M/s Logu Construction ஒப்பந்ததாரர் | –0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s அப்புசாமி ஒப்பந்ததாரர் | 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

நிபந்தனைகள்

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 க்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.Logu Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3. மேற்படி பணி திட்டப்பணி என்பதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது 2 மற்றும் 3.ஏற்றுக்கொள்ளப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.854**

28. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு வெளிப்பணி ஒப்பந்த முறையில் M/s. Trustus Out Sourcing Solutions Pvt Ltd, Chennai – 600 091 என்பவரிடம் தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் 30.06.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.07.2024 முதல் 30 வேலை நாட்களுக்கு ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1829/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**அலுவலக குறிப்பு :1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.855**

29. இந்நகராட்சி பகுதியில் 7/2022 முதல் 6/2023 வரை கீழ்க்கண்டவாறு பணிகள் மேற்கொண்டமைக்கு பணிகளின் சுருக்கம் தினகரன் செய்திதாளில் 23.10.2023 ல் வெளியிடப்பட்டது.

இச்செய்தியினை தினகரன் நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.21420/– க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை தினகரன் நாளிதழ் (Kal Publications (p) Ltd Erode) அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது (ந.க.எண் 1183/2024/இ1)

அதன் விவரம்

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023 | ரூ. 692.00 |
| 2. | 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 | ரூ.117.00 |
| 3. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023 | ரூ.64.50 |
| 4. | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023 | ரூ.536.00 |
| 5. | தூய்மை பாத திட்டம்(SBM) நகர்ப்புறம் 2022–2023 | ரூ.1591.00 |
| 6. | நமக்கு நாமே திட்டம் 2022–2023 | ரூ.45.82 |
| | பெரு மொத்தம் | ரூ.3047.12 |

**அலுவலகக் குறிப்பு: :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.856**

30. இந்நகராட்சிக்கு சொந்தமான பட்டியலில் கண்டுள்ள கடைகள் மற்றும் காலியிட குத்தகை இனங்களுக்கு 31,03,2024 அன்று 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி4) துறை, நாள் 03,07,2007 ன் படி, தற்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 880/2023/அ1 நாள். 12.03.2024 ன் படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக்குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மறுமதிப்பீடு செய்யப்பட்ட கடைகள் மற்றும் வாடகை விபரம் :

| வ.எ | வ.வி எண் | கடைகளின் விபரம் | உரிமதாரர் பெயர் | தற்போதைய மாத வாடகை | 15% உயர்த்தப்படும் வாடகை | அங்காடி மதிப்பு வாடகை | பொறியர் பிரிவு வாடகை மதிப்பு | மறு மறுப்பீடு செய்த வாடகை | வாடகை உயர்வு சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** | **(9)** | **(10)** |
| 1 | 144 | பழைய ஆஸ்பத்திரி வீதி கறிக்கடைக்கு கிழுபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 01 | எஸ். மோகன்ராஜ் | **2,823** | 3,246 | 3,450 | 2,200 | **3,500** | 24 |
| 2 | 145 | "" "" கடை எண். 02 | ஜி.பி.சுப்பிரமணியம் | **2,340** | 2,691 | 3,450 | 2,200 | **3,500** | 50 |
| 3 | 146 | "" "" கடை எண். 03 | என்.தெய்வானை | **2,059** | 2,368 | 3,450 | 2,200 | **3,500** | 70 |
| 4 | 149 | பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைக்கு கிழுபுறம் மேற்கு பார்த்த கடை எண். 06 | வி.எஸ்.முருகையன் | **1,616** | 1,858 | 3,450 | 2,200 | **3,500** | 117 |
| 5 | 150 | "" "" கடை எண். 07 | பி.எஸ்.அர்த்தநாரீஸ்வரன் | **1,863** | 2,142 | 3,450 | 2,200 | **3,500** | 88 |
| 6 | 151 | "" "" கடை எண். 08 | பி.எஸ்.அர்த்தநாரீஸ்வரன் | **2,013** | 2,315 | 3,450 | 2,200 | **3,500** | 74 |
| 7 | 152 | "" "" கடை எண். 09 | எஸ்.மோகன்ராஜ் | **2,041** | 2,347 | 3,450 | 2,200 | **3,500** | 71 |
| 8 | 153 | "" "" கடை எண். 10 | வி.சுந்தரமூர்த்தி | **2,133** | 2,453 | 3,450 | 2,200 | **3,500** | 64 |
| 9 | 154 | பழையாஸ்பத்திரி வீதி கறிக் கடைகளுக்கு கிழுபுறம் மேற்கு பார்த்த கடைகளுக்கு பின்புறம் கிழக்கு | ஆர்.ராமசாமி | **14,680** | 16,882 | 3,450 | 2,200 | **16,900** | 15 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பார்த்த கடை எண். 11 | | | | | | | |
| 10 | 157 | "" "" கடை எண். 14 | வி.எஸ்.முருகையன் | **6,084** | 6,997 | 3,450 | 2,200 | **7,000** | 15 |
| 11 | 158 | "" "" கடை எண். 15 | வி.எஸ்.முருகையன் | **5,422** | 6,235 | 3,450 | 2,200 | **6,300** | 16 |
| 12 | 160 | "" "" கடை எண். 17 | ஜி.என்.பாலமுருகன் | **2,910** | 3,347 | 3,395 | 2,300 | **3,500** | 20 |
| 13 | 161 | "" "" கடை எண். 18 | ஆர்.ராமசாமி | **2,381** | 2,738 | 3,395 | 2,300 | **3,500** | 47 |
| 14 | 163 | "" "" கடை எண். 20 | ஏ.சூரியநாராயணன் | **1,995** | 2,294 | 3,395 | 2,300 | **3,500** | 75 |
| 15 | 164 | "" "" கடை எண். 21 | ஜி.எம்.சாகுல் அமீது | **2,013** | 2,315 | 3,395 | 2,300 | **3,500** | 74 |
| 16 | 166 | வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 01 | ஏ.ருக்மணி | **794** | 913 | 1,500 | 600 | **1,500** | 89 |
| 17 | 169 | "" "" கடை எண். 04 | ஜி.பி.பிரியதர்ஷினி | **4,410** | 5,072 | 5,500 | 2,050 | **5,500** | 25 |

எனவே மேற்கண்ட பட்டியலில் கலம் எண். (5) ல் உள்ள வாடகையினை கலம் எண். (9) ல் கண்டுள்ளவாறு அந்தந்த கடைகளுக்கு 01.04.2024 முதல் மறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1690/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :**

அ) மறு மதிப்பீடு செய்துள்ள வாடகையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்படி அரசாணையின்படி மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை செலுத்த சம்மதம் தெரிவிக்கும் குத்தகைதாரர்களுக்கு மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்து அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி அரசாணையின்படி மறுநிர்ணயம் செய்துள்ள வாடகைக்கு சம்மதம் தெரிவிக்காத குத்தகை இனங்களை மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஈ) ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு அரசாணையின்படி 15% உயர்வு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு : அ. அங்கீகரிக்கப்பட்டது ஆ,இ,ஈ அனுமதிக்கப்பட்டது**
**நகர்மன்றத்தீர்மான எண்.857**

31. நகராட்சிக்கு சொந்தமான வாய்க்கால் ரோடு, பொறியர் குடியிருப்பிற்கு பின்புறம் கருமாயா எக்ஸ்டன்ஷன் – 3, 5x5 காலியிடத்தில் கோழி கடைக்கு 20.11.2021 முதல் 19.11.2024 வரை திரு கே.செந்தில்குமார் த/பெ. கனகராஜ் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது 21.03.2024 ஆம் தேதிய மனுவில், காலியிடத்தில் போதிய வசதி இல்லாத காரணத்தினால், 31.03.2024 முதல் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்

வருவாய் ஆய்வர் தனது 27.03.2024 ஆம் தேதிய குறிப்பில், மேற்படி கடைக்கு திரு.கே.செந்தில்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை மன்றத்தின் அனுமதி பெற்று,

31.03.2024 ஆம் தேதி முதல் இரத்து செய்யலாம் எனவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி, வாய்க்கால் ரோடு, பொறியர் குடியிருப்பிற்கு பின்புறம் கருமாயா எக்ஸ்டன்ஷன் – 3, 5x5 காலியிடத்தில் கோழி கடைக்கு (வரி விதிப்பு எண். 057/BD01/00037) திரு.கே.செந்தில்குமார் த/பெ. கனகராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2024 ஆம் தேதியுடன் இரத்து செய்யவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 301/2021/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.858**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2022–2023 ம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை செய்தமைக்கான தணிக்கை கட்டணம் ரூ.1,53,498/–ஐ உரிய அரசு தலைப்பு கணக்கில் (DPC–0070–60–110–AA–009) செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1389/2020/பி3)

**அலுவலகக் குறிப்பு:–** 1. அனுமதி வழங்கலாம்.

2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.859**

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2022–2023 ம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி, மற்றும் கல்விநிதிக்கான தணிக்கை முடிவுற்று 03.04.2024ம், தேதியன்று அறிக்கை பெறப்பட்டது மேற்படி தணிக்கை அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 1389/2020/பி3)

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவுசெய்யலாம்.

**அலுவலக குறிப்பு : பதிவு செய்யப்பட்டது. நகர்மன்றத்தீர்மான எண்.860**

34. இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47/2023/A2 நாள் : 22.05.2024–ல் கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனம் 2024–2025–ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய நிர்வாக பங்குத்தொகை ரூ.1,25,000/– ஐ (ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2373/2022/சி1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.861**

35. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு A, பிளாக் 4, நகரளவு எண் 11 மற்றும் 17, கதவு எண் 10 மற்றும் 12, காளமேகம் வீதியில் உள்ள CSI தூய பவுல் ஆலயம் பழைய கட்டிடத்தை இடித்து புதிய சர்ச் கட்டிடம் கட்ட அனுமதி கோரியது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சிக்கு எதிராக W.P. NO.22042/2023 ன் படி மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்டது. மேற்படி இவ்வழக்கில் 12.09.2023 இல் தீர்ப்பாணை வரப்பெற்றது. மேற்படி கட்டிடத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களால் மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவு நி.மு. எண் 14133/2023 C2, நாள் 11.09.2023 இல் மேற்படி முகவரியில் CSI தூய பவுல் ஆலயம் இயங்க தடையின்மை சான்று

வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இவ்வழக்கில் நகராட்சியின் சார்பாக வழக்காடிய சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. B. ஆனந்த் அவர்களின் கடிதம் நாள் 26.07.2023 இல் கோரியபடி வழக்கு கட்டணம் ரூபாய் 20,000 வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 1506/2019/FI)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.862**

36. வறட்சி 2024-2025 அனல் காற்று விசும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறிக்கு வரபெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் (ந.க.எண்.7121/2023 / மாதி3 நாள் 5.4.2024) தெரிவித்துள்ளவாறு எதிர்வரும் கோடை காலத்தை கருத்தில் கொண்டு அனல் காற்றின் தாக்கம் அதிகமாக இருப்பதால், பேருந்து நிலையத்தில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்ய இரும்பினால் ஆன ஸ்டேண்ட் புதிதாக செய்து சின்டெக்ஸ் தொட்டி பொருத்த ஆகும் செலவினம் ரூ.12,000/- ஆகும். மேற்படி பணியை மதிப்பீடு விலை விகிதத்தில் திருவாளர் சஞ்சை எலக்ட்ரிக்ல் ஒப்பந்ததாரரை கொண்டு பணிமேற்கொள்ளவும் அனுமதிவேண்டப்படுகிறது. (ந.க.எண். 7121 /2023/இ1)

**அலுவலகக் குறிப்பு :** 1. அனுமதிக்கலாம்
2. எதிர்வரும் கோடைகாலத்தை கருதில் கொண்டு மதிப்பீடு விலைவிகிதத்தில் திருவாளர் சஞ்சை எலக்ட்ரிக்கல் ஒப்பந்ததாரர் கொண்டு பணி மேற்கொள்ளலாம்
3. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்லாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.863**

**37.** நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந .க.எண். 2842/2024/எச்3, நாள்: 06.02.2024 -இன் படி , இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு .ஆர். செல்வக்குமார் துப்புரவு பணி மேற்பாற்வையாளர் அவர்களை சிதம்பரம் நகராட்சிக்கு பணி இடம் மாறுதல் செய்து ஆணையிடப்பட்டது. இந்நகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்திலிருந்து 09.02.2024 பிற்பகல் முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது. மேற்படியார் பணியிட மாறுதல் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் : W.P.No. 3626 of 2024 -இன் படி தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக அரசு சிறப்பு வழக்குரைஞர் திருமதி .வி. யமுனாதேவி அவர்கள் ஏற்று நடத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.254 /2024/சி1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.864**

38. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் பொதுசுகாதார பிரிவின் மூலம் நகரில் தினமும் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வரும் தூய்மைப்பணியாளர்களுக்கு உபயோகப்படும் தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவற்றை கொள்முதல் செய்து தூய்மைப்பணியாளர்களுக்கு வழங்கி பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் பொதுசுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு Lemon Gross Oil Grade - II Eco Environ Pro Solution தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பொருட்களை Government emarket Place (Gem) மூலம் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் 2024-2025 ஆம்

ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப கொள்முதல் செய்து பயன்படுத்தி கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.1014/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு : 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது நகர்மன்றத்தீர்மான எண்.865**

